

# மெட்ரோ ரெயில் நிலையங்களில் ஓவிய போட்டி

## 1,100 பேர் பங்கேற்பு

சென்னை, பிப்.3-

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், சென்னை கலைப்பள்ளியுடன் இணைந்து, பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான ஓவிய போட்டியை நேற்று நடத்தியது. இந்த போட்டி காலை 10 மணிக்கு தொடங்கி மதியம் 12 மணி வரை நடந்தது.

சென்டிரல், எழும்பூர், செனாய் நகர், அண்ணா நகர் கோபுரம், கோயம்பேடு, வடபழனி, அசோக்நகர், பரங்கிமலை, விமான நிலையம், சைதாப்பேட்டை உள்பட 15 மெட்ரோ ரெயில் நிலையங்களில் போட்டி நடந்தது. இந்த போட்டியில் 1,100 பேர் பங்கேற்றனர். போட்டியாளர்கள் 5 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு போட்டி நடத்தப்பட்டது.

இதில் சிறந்த 20 ஓவியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, மெட்ரோ பயணிகள் வாக்களிப்பதற்காக 15 மெட்ரோ ரெயில் நிலையங்களிலும் இன்று (திங்கட்கிழமை) பார்வைக்காக வைக்கப்படும். இதில் அதிக வாக்கு பெறும் ஓவியங்களுக்கு வருகிற 9-ந்தேதி சென்டிரல் மெட்ரோ ரெயில் நிலையத்தில் வைத்து பரிசுகள் வழங்கப்படும்.

மேற்கண்ட தகவல் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.